## இராசிபுரம் நகராட்சி
## நகர்மன்ற சாதாரணக் கூட்ட அறிவிப்பு

2024–ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 05–ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 04.00 மணிக்கு இராசிபுரம் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் ஒன்று நகர் மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி
நாள் : 02.02.2024

தலைவர்,
நகர் மன்றம்.

### பொருள்கள்

(1) இராசிபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 2, கட்டனாச்சம்பட்டி பிளாக் எண். 1 பகுதியில், வார்டு – A, பிளாக் – 1, நகர புல எண். 24/3, 4 மற்றும் 28–இல் மனுதாரர் திரு J. கந்தசாமி, மற்றும் திருமதி C. ஸ்ரீலதா, இராசிபுரம் என்பவருக்கு 1.10 ஏக்கர் பரப்புள்ள இடத்தில் 20 குடியிருப்பு மனைகள் உள்ளடக்கிய மனைப்பிரிவிற்கு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் மனைப்பிரிவு வரைபட எண். SWP/DTCP/ NAMAKKAL/LAYOUT NO. 309/2023 நாள் 12.09.2023–இல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி, மனைப்பிரிவிற்கு அடிப்படை வசதிகளான தார் சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் குழாய் வசதி, மழைநீர் கால்வாய் ஆகிய வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது. மனுதாரர் நகராட்சிக்குச் செலுத்த வேண்டிய கட்டணம் ரூ. 49961/– சலான் எண். 053/01/2/23–24/0005947 நாள் 31.01.2024–இல் செலுத்தியுள்ளார். மேற்படி மனைப்பிரிவில் பொது ஒதுக்கீடுகள் மற்றும் மனைப்பிரிவு சாலைகள் தானப்பத்திர ஆவண எண். 5528/2023 நாள் 14.08.2023–இன்படி சாலைகள் மற்றும் மூலை முடக்குகளின் பரப்பளவு 1678.31 சதுர மீட்டர் இடமும், பொது உபயோகத்திற்காக 15.52 சதுர மீட்டர் இடமும் இராசிபுரம் நகராட்சி ஆணையாளர் பெயரில் தானமாக பதிவு செய்து, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்கள் மூலம் நகராட்சியில் சமர்ப்பித்துள்ளதை பின்னேற்பு ஒப்புதல் பெறுவதற்கும், மேற்க்கண்ட மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

அரசாணை (நிலை) எண். 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 09.12.2020 மற்றும் நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண். 12843/ 22/டிபி2 நாள் 20.10.2022 சுற்றறிக்கையின்படியும், மேற்க்கண்ட தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவிலுள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை தானப்பத்திரத்தின்படி தானமாக ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களை இந்நகராட்சி பராமரிப்பிற்கு ஏற்க, தானமாக பத்திரப்பதிவு செய்ததை இம்மன்றம் பின்னேற்பு ஒப்புதல் வழங்கலாம் மற்றும் மேற்க்கண்ட மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம்.

(4269/23/எப்1)

**தீர்மானம் எண். 530**

ஒப்புதல் வழங்கப்பட்டது

( 2 ) இந்நகராட்சி எல்லைக்குள் கதவு எண். 22D/A,சி.பி. கண்ணையா தெரு பகுதியில் திருமதி ஆர்.என்.வி. மனோன்மணி அவர்களுக்கு பாத்தியப்பட்ட கட்டிடத்தினை வணிக உபயோக கட்டிடமாக மாற்றியதற்கு 1971–ஆம் வருட தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 56 மற்றும் 57–இன்கீழ் அறிவிப்பு (Stop Work Notice) வழங்கியதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண். W.P.NO.34550/2023-இல் ஆணையாளர், இராசிபுரம் நகராட்சி அவர்களை பிரதி வாதியாக சேர்த்து வழக்கு தொடர்ந்ததை, இந்நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்காடிய அரசு வழக்கறிஞர் திரு எஸ்.ஜெ. மொகம்மது சாதிக், அட்வகேட் அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ. 25,000/– வழங்க பட்டியல் அனுப்பியுள்ளார். மேற்கண்ட வழக்கிற்கு நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்காடியதற்கும் அதற்காகும் செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் திருமதி ஆர்.என்.வி. மனோன்மணி என்பவர் சர்வே வார்டு – A, பிளாக் – 6, நகரளவு எண்.153 தெருவில் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடைஞ்சலாக ஆக்கிரமிப்பு செய்திருந்ததை அகற்றக் கோரியது சம்மந்தமாக சார்பு நீதிமன்றம், இராசிபுரத்தில் தொடர்ந்த வழக்கு எண். I.A.NO.2/2023 மற்றும் O.S.NO.320/2023 வழக்கிற்கு நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்காட நகர்மன்ற வழக்கறிஞர் திரு ஐ. கணபதி, எம்.ஏ.பி.எல். அவர்களை நியமனம் செய்வதற்கும், அதற்காகும் செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(3153/23/எப்1)**

**தீர்மானம் எண். 531**

அனுமதிக்கப்பட்டது

( 3 ) இராசிபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 19, காட்டூர் காட்டுக்கொட்டாய் பகுதியில் (துட்டான் குட்டைரோடு) சர்வே வார்டு – C, பிளாக் – 23, நகர புல எண். 45/7, 9 மற்றும் 10 (பழைய சர்வே எண். 292/9)–இல் மனுதாரர் திரு பி. மனோகரன் மற்றும் திருமதி எம். கற்பகம், கதவு எண். 43B, காட்டூர் ரோடு, இராசிபுரம் என்பவருக்கு 0.9450 ஏக்கர் பரப்புள்ள இடத்தில் 17 குடியிருப்பு மனைகள் உள்ளடக்கிய மனைப்பிரிவிற்கு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் மனைப்பிரிவு வரைபட எண். SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO. 312/2023 நாள் 27.09.2023–இல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி, மனைப்பிரிவிற்கு அடிப்படை வசதிகளான தார் சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் குழாய் வசதி, பாதாள சாக்கடை வசதி, மழைநீர் கால்வாய் ஆகிய வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது. மனுதாரர் நகராட்சிக்குச் செலுத்த வேண்டிய இதரக் கட்டணம் ரூ. 36,125/– சலான் எண். 053/01/1/23–24/0005456 நாள் 29.01.2024–இல் செலுத்தியுள்ளார். மேற்படி மனைப்பிரிவில் பொது ஒதுக்கீடுகள் மற்றும் மனைப்பிரிவு சாலைகள் தானப்பத்திர ஆவண எண். 5506/2023 நாள் 11.08.2023–இன்படி சாலைகள் மற்றும் மூலை முடக்குகளின் பரப்பளவு 1331.85 சதுர மீட்டர் இடமும், பொது உபயோகத்திற்காக 14.26 சதுர மீட்டர் இடமும் ஆணையாளர் பெயரில் தானமாக பதிவு செய்து, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்கள் மூலம் நகராட்சியில் சமர்ப்பித்துள்ளதை பின்னேற்பு ஒப்புதல் பெறுவதற்கும், மேற்க்கண்ட மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் பெறுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

அரசாணை (நிலை) எண். 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 09.12.2020 மற்றும் நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண். 12843/ 22/டிபி2 நாள் 20.10.2022 சுற்றறிக்கையின்படியும், மேற்க்கண்ட தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவிலுள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை தானப்பத்திரத்தின்படி தானமாக ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களை இந்நகராட்சி பராமரிப்பிற்கு ஏற்க, தானமாக பத்திரப்பதிவு செய்ததை இம்மன்றம் பின்னேற்பு ஒப்புதல் வழங்கலாம் மற்றும் மேற்க்கண்ட மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம்.

**(5079/23/எப்1)**

**தீர்மானம் எண். 532**

ஒப்புதல் வழங்கப்பட்டது

**( 4 )** இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான TN 28 AS 0104 டிப்பர் லாரிக்கு தகுதி சான்றை புதுப்பிக்க அதன் பழுது நீக்க அங்கீகார நிறுவனமான கிரிஸ்டல் மோட்டார்ஸ் நிறுவனம் விலைப்புள்ளி அளித்துள்ளது. அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

விலைப்புள்ளி அளித்துள்ள கிரிஸ்டல் மோட்டார்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கவும், அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதற்கு உத்தேச செலவினம் ரூ. 2.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(390/24/எச்1)**

**தீர்மானம் எண். 533**

அனுமதிக்கப்பட்டது

**( 5 )** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட RMC காலனி பகுதியிலுள்ள தூய்மை பணியாளர் குடியிருப்பினை அங்கன்வாடியாக சீரமைக்கவும் மற்றும் ஏற்கனவே அருகே உள்ள மிகவும் பழுதடைந்த அங்கன்வாடியை இடித்து அப்புறப்படுத்தவும் உத்தேச செலவினத் தொகை ரூ. 3.20 இலட்சத்திற்கு வருவாய் நிதியிலிருந்து பணியினை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். **(522 /24/இ1)**

**தீர்மானம் எண். 534**

அனுமதிக்கப்பட்டது

**( 6 )** இந்நகராட்சியில் வார்டு எண். 27 கோனேரிப்பட்டி கழிவுநீர் கால்வாய் சுத்தம் செய்யவும் வார்டு எண். 19–இல் இடுகாடு பகுதியில் முட்செடி மற்றும் புதர்களை அகற்றவும் JCB மற்றும் டிராக்டர்கள் மூலம் பணிகள் மேற்க்கொள்ள ஏற்படும் உத்தேச செலவினம் ரூ. 3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(105 /23/எச்1)**

**தீர்மானம் எண். 535**

அனுமதிக்கப்பட்டது

(7) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் வார்டு எண். 27–இல் கோனேரிப்பட்டி காட்டுக்கொட்டாய் பகுதியிலுள்ள கழிவுநீர் வாய்க்காலில் பெருமளவு கழிவு மண் அகற்றவும், வார்டு எண். 19–இல் காட்டூர் சாலையிலுள்ள இடுகாடு பகுதியில் முள், கருவேலம் மரங்களை அகற்றவும் எர்த் மூவர்ஸ் வாகனம் மற்றும் டிராக்டர் கொண்டு பணி மேற்கொள்ள நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திருமதி அமுதா JCB ஒர்க்ஸ் | – | ஒரு மணி நேரத்திற்கு ரூ. 1200/– |
| | டிராக்டர் ஒரு நடை அள்ள கூலி | - | ரூ. 600/- |
| 2) | சதாசிவம் JCB ஒர்க்ஸ் | – | ஒரு மணி நேரத்திற்கு ரூ. 1250/– |
| | டிராக்டர் ஒரு நடை அள்ள கூலி | - | ரூ. 650/- |

குறைவான விலைப்புள்ளி அளித்த திருமதி அமுதா JCB ஒர்க்ஸ் அவர்களுக்கு பணியாணை வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்த திருமதி அமுதா JCB ஒர்க்ஸ் அவர்களுக்கு பணியாணை வழங்க மன்றம் ஏற்கலாம்.

2) நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(105 /23/எச்1)**

**தீர்மானம் எண். 536**

அனுமதிக்கப்பட்டது

(8) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்டப் பகுதிகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் நீரேற்றம் செய்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குடிநீரினை கிருமிநாசினி செய்ய Gas Chlorination பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது Gas Chlorination இருப்பு குறைவாக உள்ளதால் 6 மாதத்திற்கு தேவையான சிலிண்டர் சப்ளை செய்து உபயோகம் செய்ய உத்தேச செலவினத் தொகை ரூ. 2.50 இலட்சத்திற்கு குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்ற அனுமதிக்கலாம்.

(105 /23/எச்1)

**தீர்மானம் எண். 537**

அனுமதிக்கப்பட்டது

ஒம்/– முனைவர் இரா. கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.